**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.100/2023**

**வா.சா.– 1 விஜயா – , க/பெ.அய்யாசாமி**

**நாள். 02.03.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1ம் பிரதிவாதி லோகாம்பாள் எனது அண்ணனின் மனைவி ஆவார். 2ம் பிரதிவாதி அபிராமி, 3ம் பிரதிவாதி கார்த்திக் ஆகியோர்கள் 1ம் பிரதிவாதியின் மக்கள் ஆவார்கள். 4ம் பிரதிவாதி எனது இன்னொரு சகோதரர் ஆவார். 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்து விட்டார். எனக்கு 1972ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனது தகப்பனார் இருந்து சீரும் சிறப்புமாக எனது திருமணத்தை நடத்தி வைத்தார். என் கணவர் மாவட்ட வன அதிகாரியாக இருந்தார். அவர் தொழில் நிமித்தமாக பல ஊர்களில் இருந்தார். நானும் அவருடன் இருந்தேன். எனது இன்னொரு சகோதரி சரோஜாவுக்கு எனக்கு திருமணமாகி 2,3 வருடத்தில் திருமணம் ஆனது. அவரும் திருமணமான பின்பு அவரது கணவர் வீட்டில் வசித்து வந்தார். தாவா சொத்துக்கள் முழுவதும் பாலகுருநாதனும் , கிருஷ்ணமூர்த்தியும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். கடந்த 50 வருடங்களாக அவர்கள் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் இருவரும் தான் என்னையும், என் சகோதரியையும் திருமணமான பின்னிட்டு அவர்கள் தான் தனித்து தாவா சொத்தை அனுபவித்து வருகிறாகள் என்றால் சரியல்ல. என் சகோதரி சரோஜா பதிவு செய்யப்பட்ட ஒரு விடுதலை பத்திரம் சகோதரர்களுக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 9வது அயிட்ட சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த 9வது அயிட்ட சொத்தில் நாராயணசாமியும், சுப்பாரெட்டியின் மகன் பொன்ராம் பிரச்சனை செய்து வந்தார்கள் எனக்கு அது பற்றி தெரியாது. பாலகுருநாதனும், கிருஷ்ணமூர்த்தியும் விளம்புகை பரிகாரம் கேட்டு திண்டுக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதில் டிகிரி பெற்றிருக்கிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்துக்களுக்குரிய வரி செலுத்துவதற்காக எங்கள் ஈவை கொடுத்து வந்தோம் என்பதை நிரூபிக்க நானும் 2ம் வாதியும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திலிருந்து வருமானம் கொடுத்ததற்காக எந்த ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை. நான் வரி செலுத்துவதற்காக எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும் வருமானத்திலிருந்து ஈவு தொகை பெற்றுக் கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. என் மகன் திண்டுக்கல்லில் ஒரு வீடு வாங்கியுள்ளார். ஒரு தோட்டம் வாங்கியுள்ளார். அவைகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் இது சம்மந்தமில்லை என்பதால் சேர்க்கவில்லை. எங்களுக்கு திருமணமான பின்பு என் சகோதர்கள் எங்களை வெளியேற்றி விட்டு தனித்து அனுபவித்து வந்தார்கள் என்றும் ஆகவே தாவா சொத்தை கூட்டுச் சொத்தாக பாவிக்க முடியாது என்றால் சரியல்ல. 2ம் வாதி என் சகோதரி சொத்துக்களைப் பொறுத்து விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் அது பற்றி தெரியாது. ஆகவே 2ம் வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**5ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை அனுசரித்து ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.03 15:27:40 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.